




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்”

புலனாய்வு நாளிதழ்








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 281 04.04.2026 SATURDAY PANGUNI: 21 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 281 04.04.2026 சனிக்கிழமை பங்குனி : 21 விலை : ரூ.5/-


## புதுச்சேரியில்

# “பிரதமர் மோடி ரோடு ஷோ!”



புதுச்சேரி: ஏப்.4-

புதுச்சேரியில் பிரதமர் மோடி, ரோடு ஷோ நடத்தி தேஜ கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டினார். இதில், முதல்வர் ரங்கசாமி, உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் ஆகியோர் பங்கேற்றனர்.

புதுச்சேரி சட்டசபை தேர்தல் வரும் 9ம் தேதி நடக்க உள்ளது. 30 தொகுதிக்கான தேர்தல் களத்தில் 294 வேட்பாளர்கள் உள்ளனர். ஓட்டு பதிவிற்கு இன்னும் 6 நாட்களே உள்ள நிலையில், வேட்பாளர்களை ஆதரித்து அடுத்தடுத்து அரசியல் கட்சி தலைவர்கள் புதுச்சேரி வர உள்ளதால் இறுதி கட்ட பிரசாரம் களை கட்டியுள்ளது.

தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நேற்று பிரதமர் மோடி ரோடு ஷோ நடத்தி ஆதரவு திரட்டினார். அஜந்தா சிக்னலில் துவங்கிய ரோடு ஷோ ராஜா தியேட்டர் சிக்னலில் நிறைவு பெறுகிறது.

பிரதமர் மோடி பங்கேற்ற இந்த ரோடு ஷோவில், முதல்வர் ரங்கசாமி, உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

சாலையின் இருபுறமும் கூடிய தேஜ கூட்டணி தொண்டர்கள் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். பல இடங்களில் இசை நிகழ்ச்சிகள், மோடி, அவர்களை நோக்கி கையசைத்தபடி வரவேற்பினை ஏற்றுக்கொண்டார்.

## தேர்தல் நாளில் தமிழகம் உள்ளிட்ட 5 மாநிலங்களில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு அளிக்க உத்தரவு



புதுடெல்லி: ஏப்.4-

தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள 5 மாநிலங்களில் வாக்குப்பதிவு தினத்தன்று தினக்கூலிகள், தற்காலிகப் பணியாளர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்கப்படும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ‘1951ம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 135பின்படி எந்த ஒரு வணிகம், வர்த்தகம், தொழில்துறை நிறுவனம் அல்லது வேறு ஏதேனும் அமைப்பில் பணிபுரிபவர்களில் வாக்களிக்கத் தகுதியுள்ள ஒவ்வொரு நபருக்கும் வாக்குப்பதிவு நாளன்று ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்கப்படும். இற்காக எந்த பிடித்தமும் செய்யப்படாது. இந்த விதிகளை மீறும் எந்த ஒரு உரிமையாளரும் அபராதத்துக்கு உள்ளாவார்.

தங்கள் தொகுதிக்கு வெளியே அமைந்துள்ள தொழிற்சாலை அல்லது வணிக நிறுவனங்களில் பணிபுரியும் அல்லது வேலை செய்யும் வாக்காளர்கள், தேர்தல் நடைபெறும் தொகுதியில் வாக்காளர்களாக பதிவு செய்திருந்தால், வாக்குப்பதிவு நாளன்று தங்களது வாக்குகளைச் செலுத்துவதற்கு ஏதுவாக ஊதியத்துடன் கூடிய விடுமுறை பெறும் உரிமை அவர்களுக்கு உண்டு. அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளும் இதை கண்டிப்பாக பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும்.

இந்த அறிவிப்பு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி, அசாம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களுக்குப் பொருந்தும். மேலும், 8 தொகுதிகளில் இடைத் தேர்தல் நடைபெற உள்ள கோவா, குஜராத், கர்நாடகா, மகாராஷ்டிரா, நாகாலாந்து, திரிபுரா ஆகிய ஆறு மாநிலங்களுக்கும் இது பொருந்தும்’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அசாம், கேரளா, புதுச்சேரி சட்டப்பேரவைகளுக்கு ஏப்ரல் 9ம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. கோவா, கர்நாடகா, நாகாலாந்து, திரிபுரா ஆகிய மாநில சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தலும் இந்த தேதியில் நடைபெற உள்ளது. தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத் தேர்தல் மற்றும் குஜராத் மற்றும் மகாராஷ்டிராவின் இடைத் தேர்தல் ஆகியவ ஏப்ரல் 23ம் தேதி நடைபெற உள்ளது. மேற்கு வங்கத்தைப் பொருத்தவரை ஏப்ரல் 23 மற்றும் ஏப்ரல் 29 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் பதிவாகும் வாக்குகள் அனைத்தும் மே 4ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## பாஜக வேட்பாளர் பட்டியல் வெளியீடு



சென்னை: ஏப்.4-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக தலைமையிலான கூட்டணியில் போட்டியிடும் பாஜக வேட்பாளர்கள் பட்டியலை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, நயினார் நாகேந்திரன் சாத்தூரிலும், தமிழிசை சவுந்தர்ராஜன் மயிலாப்பூரிலும், எல்.முருகன் அவிநாசி (தனி) தொகுதியிலும், வானதி சீனிவாசன் கோவை தெற்கிலும் போட்டியிடுகின்றனர். அண்ணாமலை தேர்தலில் போட்டியிடவில்லை.

தமிழகத்தில் வரும் 23ம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறுகிறது. இத்தேர்தலில், 4 முனைப் போட்டி நிலவும் சூழலில் அதிமுக தலைமையிலான பாஜக, பாமக, அமமுக, தாமக உள்ளிட்ட கட்சிகள் இடம்பெற்றுள்ளன. இதில், பாஜகவுக்கு 27 தொகுதிகள் ஒதுக்கப்பட்டது. கடந்த முறை 20 தொகுதிகளில் போட்டியிட்ட பாஜக இம்முறை 27 தொகுதிகளில் களம் காண்கிறது.

தமிழக பாஜக வேட்பாளர்கள் விவரம்:

1. ஆவடி ராஜசிம்ம மஹிந்திரா என்ற அஸ்வின் குமார்
2. மயிலாப்பூர் தமிழிசை சவுந்தர்ராஜன்
3. தளி நாகேஷ் குமார்
4. திருவண்ணாமலை ஏழுமலை
5. ராசிபுரம் (தனி) பிரேம்குமார்
6. மொடக்குறிச்சி கிருத்திகா சிவகுமார்
7. உதகமண்டலம் போஜராஜன்
8. அவிநாசி (தனி) எல்.முருகன்
9. திருப்பூர் தெற்கு தங்கராஜ்
10. கோவை வடக்கு வானதி சீனிவாசன்
11. திருவாரூர் கோவி. சந்துரு
12. தஞ்சாவூர் முருகானந்தம்
13. கந்தர்வக்கோட்டை (தனி) உதயகுமார்
14. புதுக்கோட்டை ராமச்சந்திரன்
15. அறந்தாங்கி கவிதா ஸ்ரீகாந்த்
16. திருப்பத்தூர் திருமாறன்
17. மானாமதுரை (தனி) பால கணபதி
18. மதுரை தெற்கு ராம ஸ்ரீநிவாசன்
19. சாத்தூர் நயினார் நாகேந்திரன்
20. ராமநாதபுரம் நாகேந்திரன்
21. திருச்செந்தூர் ராதாகிருஷ்ணன்
22. வாசுதேவநல்லூர் (தனி) ஆனந்தன் ஐயாசாமி
23. ராதாபுரம் பாலகிருஷ்ணன்
24. நாகர்கோவில் காந்தி
25. குளச்சல் சிவக்குமார்
26. பத்மநாபபுரம் ரமேஷ்
27. விளவங்கோடு விஜயதரணி

கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக 4 தொகுதிகளில் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

## தமிழக டிஜிபி மாற்றத்தில் மத்திய அரசு தலையீடு

### இந்திய கம்யூ. குற்றச்சாட்டு



சென்னை, ஏப்.4-

மத்திய அரசின் தலையீட்டால் தமிழக டிஜிபி மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் நெருங்கிவரும் வேளையில், மத்திய அரசின் அழுத்தத்தால் டிஜிபி வெங்கட்ராமன், தாம்பரம், மதுரை காவல் ஆணையர்கள், 2 மாவட்ட ஆட்சியர்களை தேர்தல் ஆணையம் இடமாற்றம் செய்துள்ளது.

இவர்களுடன் மேலும் பல உயர் அதிகாரிகளை இடமாற்றம் செய்ய தேர்தல் ஆணையம் முயற்சிப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. தேர்தல் ஆணையம் மத்திய பாஜக அரசின் கைப்பாவையாக செயல்படுவது கண்டனத்துக்குரியது.

அரசியல் சட்டப்படி நடுநிலையோடு செயல்பட வேண்டிய தேர்தல் ஆணையம், பாஜகவுக்கு ஆதரவாக செயல்படுவது நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கும், நேர்மையாக, நடுநிலையாக தேர்தலை நடத்துவதற்கும் எதிரானது. மத்திய பாஜக அரசின் வற்புறுத்தலால் மேற்கொள்ளும் இத்தகைய பாரபட்ச போக்குகளை தேர்தல் ஆணையம் உடனடியாக கைவிட வேண்டும்.

தீர்ப்புக்கு வரவேற்பு: ஆயுள் தண்டனைக் கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்வது, தண்டனைக் குறைப்பு ஆகியவற்றில் ஆளுநர்களின் தலையீடு பற்றிய உயர் நீதிமன்றத் தீர்ப்பு வரவேற்கத்தக்கது.

‘ஆளுநர் தனது அதிகாரங்களைப் பயன்படுத்தும்போது, அமைச்சரவையின் ஆலோசனையை கட்டாயம் பின்பற்ற வேண்டும். தண்டனை தளர்வு, மன்னிப்பு போன்ற அதிகாரங்கள் ஆளுநரின் தனிப்பட்ட விருப்பங்கள் அல்ல. அவை ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் ஆலோசனையின் அடிப்படையில் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டியவை’ என்பதை இத்தீர்ப்பு உறுதி செய்துள்ளது.

இது ஜனநாயகம், அரசியலமைப்பு ஆட்சி மற்றும் மாநில உரிமைகளுக்கான ஒரு முக்கிய வெற்றி ஆகும்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

## “அசாமில் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவோம்” தேர்தல் பிரச்சாரத்தில் அமித் ஷா உறுதி



சாய்கோன் (அசாம்): ஏப்.4-

அசாமில் பாஜக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவோம் என்றும், அதன்பிறகு எவரும் நான்கு திருமணங்கள் செய்துகொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் அக்கட்சியின் மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான அமித் ஷா தெரிவித்துள்ளார்.

அசாம் சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு சாய்கோன் பகுதியில் நடந்த பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய அமித் ஷா, ‘‘அசாம் இயற்கை வளம் மிக்கது. ஆனால், காங்கிரஸ் கட்சி அசாமை ஊடுருவல்காரர்களிடம் ஒப்படைத்துவிட்டது. ஊடுருவல்காரர்கள் ஏழைகளின் நிலங்களை அபகரித்து வருகின்றனர். அவர்கள் காசிரங்கா வன நிலங்களையும் விட்டுவைக்கவில்லை.

கடந்த 10 ஆண்டுகளில், பாஜக அரசு 1,50,000 ஏக்கர் நிலத்தை ஊடுருவல்காரர்களிடமிருந்து மீட்டெடுத்துள்ளது. மீண்டும் ஒருமுறை பாஜக அரசை அமைத்திடுங்கள்; அசாம் முழுவதையும் ஊடுருவல்காரர்களிடமிருந்து மீட்டெடுக்க பாஜக பாடுபடும்.

காங்கிரஸ் அசாமின் பழங்குடி மக்களிடமிருந்து நிலத்தைப் பறித்து ஊடுருவல்காரர்களிடம் ஒப்படைத்தது. ஆனால் இன்று, பாஜக அரசு 1,00,000 ஏக்கருக்கும் அதிகமான நிலத்தை பழங்குடி மக்களுக்குத் திருப்பிக் கொடுத்துள்ளது. இதை நான் பாராட்டுகிறேன், அசாம் முதல்வரை வாழ்த்துகிறேன்.

கடந்த 10 ஆண்டுகளில், நாங்கள் ஊடுருவல்காரர்களை அடையாளம் கண்டுள்ளோம். ஹிமந்த பிஸ்வாவை மீண்டும் முதல்வராக்குங்கள், நாங்கள் ஒவ்வொரு ஊடுருவல்காரரையும் ஒருவர்பின் ஒருவராக வெளியேற்றப் பாடுபடுவோம்.

அசாமின் பாலஸ்பரியை ஒரு கல்வி மையமாக மாற்ற நாங்கள் விரும்புகிறோம். இங்கு மிமிவிஜ கொண்டுவர முடிவெடுத்துள்ளோம். ஆனால், காங்கிரஸ் கட்சியோ மிமிவிஜ (இந்திய மேலாண்மை நிறுவனம்) எதிர்க்கிறது. இன்று நான் ராகுல் காந்திக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் எவ்வளவு எதிர்த்தாலும் பாலஸ்பரியில் மிமிவி நிச்சயம் கட்டப்படும்.

காங்கிரஸ் கட்சி வெறும் 4 மருத்துவக் கல்லூரிகளை மட்டுமே விட்டுச் சென்றிருந்தது. நாங்கள் 14 மருத்துவக் கல்லூரிகளைக் கட்டியுள்ளோம். தற்போது கூடுதலாக 10 மருத்துவக் கல்லூரிகளை பாஜக அரசு கட்டி வருகிறது. பாலஸ்பரி மற்றும் அசாமின் மகன்களும் மகள்களும் இங்கேயே படித்து, அசாமிலேயே வேலை செய்வதை உறுதி செய்வதே மோடியின் விருப்பமாகும்.

அசாம் மாநில காங்கிரஸ் தலைவர் இந்தியாவின் எதிரி நாட்டுடன் தொடர்பு வைத்திருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார், ஆனால் அவர் மவுனம் காக்கிறார். காங்கிரஸ் 60 ஆண்டுகளில் அசாமில் மூன்று பாலங்களை மட்டுமே கட்டியது, அதேசமயம் பாஜக 10 ஆண்டுகளில் ஆசியாவின் மிகப்பெரிய மற்றும் நீளமான பாலங்களை அசாமில் கட்டியது.

அசாமுக்கு உத்வேகம் அளிப்பதே எங்கள் கொள்கை. இதற்காக நாங்கள் 13 ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு, அசாமில் அமைதியைக் கொண்டுவர பாடுபட்டுள்ளோம். அசாமில் ஊடுருவல்காரர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. நாங்கள் அசாமில் ‘பொது சிவில் சட்டம்‘ (ஹிசிசி)ஐ அமல்படுத்துவோம். அதன் பிறகு, எவரும் நான்கு திருமணங்கள் செய்துகொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

குடும்ப தலைவிகள் ஒவ்வொருக்கும் மாதம் ஒன்றுக்கு 3,000 ரூபாய் வழங்கப்படும். விவசாயிகளுக்கு ஆண்டுக்கு 11,000 ரூபாய் வழங்கப்படும். 2 லட்சம் இளைஞர்களுக்கு நாங்கள் அரசு வேலைவாய்ப்புகள் வழங்கப்படும்’’ என தெரிவித்தார்.



■ நெல்லை தெற்கு மாவட்ட தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் ஜெயகோபால் ராதாபுரம் சட்டமன்ற தொகுதியில், சுயேட்சை வேட்பாளராக போட்டியிட ராதாபுரம் சட்டமன்ற தொகுதி தேர்தல் அதிகாரியிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். அருகில் நகரத் தலைவர் முருகன்.

# நிலவுக்கு வீரர்களை அனுப்பியது நாசா

புளோரிடா, எப்.4-

நிலவுக்கு கடைசியாக நாசா கடந்த 1971ம் ஆண்டு அப்போலோ விண்கலம் மூலம் 3 வீரர்களை அனுப்பியது. 50 ஆண்டுக்கு பின் தற்போது ஆர்டெமிஸ்2 திட்டத்தின் கீழ் எஸ்எல்எஸ் ராக்கெட் மூலம் ஓரியான் விண்கலத்தை நிலவுக்கு நாசா நேற்று பரிசோதனை முயற்சியாக அனுப்பியது. இந்த விண்கலத்தில் நாசா கமாண்டர் ரீட் வைஸ்மேன், பைலட் விக்டர் க்ளேவர், கிறிஸ்டினா கோச், கனடா விண்வெளி வீரர் ஜெரிமி ஹேன்சன் ஆகியோர் பயணம் செய்தனர்.



இந்த 4 வீரர்களும் 10 நாள் பயணம் மேற்கொண்டு நிலவை சுற்றி பயணம் செய்வர். ஆனால், நிலவில் தரையிறங்க மாட்டார்கள். அதற்கு பதில் நிலவைச் சுற்றி 6 லட்சம் மைல்கள் தூரம் பயணம் செய்து, நிலவின் மேற்பரப்பை படம் பிடிப்பர். மேலும் எதிர்கால திட்டங்களுக்கான முக்கிய தகவல்களை சேகரிப்பர். நிலவை சுற்றி வந்தபின் விண்கலம் பசிபிக் கடலில் வரும் 11ம் தேதி பாராசூட் மூலம் விழும். அதை அமெரிக்க கடற்படையினர் மீட்பர்

# 10 பைசாவுக்கு பிரயோஜனம் இல்லாத தேமுதிகவுக்கு 10 சீட் கொடுத்த திமுக

## நடிகை விந்தியா நக்கல்

தாம்பரம், ஏப்.4-

பத்து பைசாவுக்கு பிரயோஜனம் இல்லாத தேமுதிகவுக்கு திமுக பத்து சீட் கொடுத்துள்ளது. மானம், ரோஷம் உள்ள திமுகவினர் இம்முறை அதிமுகவுக்கு வாக்களிப்பார்கள் என்று நடிகை விந்தியா ஆவேசமாகப் பேசினார்.

தாம்பரம் தொகுதி அதிமுக வேட்பாளர் ராஜேந்திரனை ஆதரித்து நடிகை விந்தியா, கிழக்கு தாம்பரத்தில் நேற்று மாலை பிரசாரம் செய்தார். அப்போது அவர் பேசியதாவது: திமுகவில் தாம்பரம் தொகுதியில் ராஜாவுக்கு சீட் தராததால் அவரது ஆதரவாளர்கள் கேட்டதற்கு, ''இரண்டு மூன்று முறை இருந்துட்டாரு இல்ல அதன் பிறகு என்ன'' எனக் கேட்டு கேவலப்படுத்தி தனது சொந்தக் கட்சிக்காரர்களையே



அவமானப்படுத்தியுள்ளார் டி.ஆர்.பாலு.

பத்து பைசாவுக்கு கூட பிரயோஜனம் இல்லாத தேமுதிகவுக்கு பத்து சீட்டை திமுக கொடுத்துள்ளது. திமுகவில் மானம், ரோஷம் உள்ளவர்கள் இந்த முறை அதிமுகவுக்கு வாக்களிப்பார்கள். ஐந்து வருட திமுக ஆட்சியில் திமுக காரர்களே கடுப்பாகியுள்ளனர். தமிழக பெண்களின் பாதுகாப்பிற்காக அதிமுகவிற்கு வாக்கு அளிக்குமாறு கேட்கிறோம்.

கொடூரமான திமுக ஆட்சி தேவையா? திமுகவை நம்பாதீர்கள். உங்களை காப்பாற்றக்கூடிய நல்ல வாய்ப்பு தான் இந்த தேர்தல். அதிமுக ஆட்சி வந்தால் மட்டுமே பெண்கள் சுதந்திரமாக நடமாட முடியும். தமிழகமும், தமிழக மக்களுக்கும் தலை நிமிர்ந்து ஒரு நிமிடம் யோசித்தால் திமுக இருக்காது. இந்த தேர்தலில் பல இடங்களில் அதிமுக கூட்டணியிடம் திமுக கூட்டணி தோல்வியடையும். இவ்வாறு அவர் பேசினார். இதேபோல் சோழிங்நல்லூர் தொகுதியில் போட்டியிடும் கே.பி. கந்தனை ஆதரித்து ஜல்லடியன்பேட்டையில் நடிகை விந்தியா, பிரச்சாரம் மேற்கொண்டார்.

# ஆ.ராசா பேசியதாக வெளியான ஆடியோ சுட்டிக்காட்டி பழனிசாமி விமர்சனம்

கிருஷ்ணகிரி, ஏப்.4-

சட்டப்பேரவைத் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், திமுக எம்பி ஆ.ராசா பேசியதாக ஆடியோ ஒன்று இணையத்தில் வைரலாகி வருகிறது. இது திமுகவில் பெரும் பூகம்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இதற்கிடையே கிருஷ்ணகிரியில் தேர்தல் பிரச்சாரத்தின்போது அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, இந்த ஆடியாவை முன்வைத்து பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது: ''2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலில், கனிமொழியும், ஆ.ராசாவும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். ஜெயிலில் இருந்த ஆ.ராசா ஆடியோ வெளியாகியுள்ளது. அதில், திமுகவில் கனிமொழிக்கு காட்டிய அக்கறையை ராசாவுக்கு காட்டவில்லை. சமூக நீதி பேசும் திமுகவில் சாதியப் பாகுபாடு





இருக்கிறது. கலைஞர் டிவிக்கு பணம் போனதை ஒப்புக்கொள்கிறார். கருணாநிதியின் இறுதிக் காலத்தில் ஸ்டாலின் அவரை கைதியாகத்தான் வைத்திருந்தார் என்று ராசா கூறுகிறார்.

கருணாநிதியின் இறுதிகாலத்தில் ஸ்டாலினுக்கும், கனிமொழிக்கும் பிரச்னை ஏற்பட்டது அதனால்தான் இம்முறை சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கிடைக்கவில்லை என்கிறார். ஸ்டாலினுக்கு பெரிய மூளை இருக்குதா? டெல்லிக்கு போனால் ஆங்கிலத்தில் கிழித்துவிடுவாரா? கனிமொழியை ஒருநாளும் நம்ப மாட்டார், என்னை எப்போதும் கட்சியில் இருந்து வெளியில் தள்ளமுடியாது என்கிறார்.

ஸ்டாலின் அவரது அப்பாவை கைதி போல வைத்திருந்தார், சொந்த அப்பாவையே அப்படி வைத்தவர் நாட்டு மக்களை எப்படி வைப்பார், உண்மை செய்தி ராசா மூலம் வெளியில் வந்துவிட்டது. திமுகவின் இறுதி அத்தியாயத்தை ஸ்டாலின் எழுதுகிறார்' என்று ராசா பேசியிருக்கிறார். இவ்வாறு அவர் பேசினார்.

# "உயிருள்ளவரை உங்கள் குடும்பத்தில் ஒருவனாக இருப்பேன்!" செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி உருக்கம்

சின்னாளபட்டி, எப்.4-

ஆத்தூர் தொகுதியில் உள்ள மக்களின் குடும்பத்தில் ஒருவராக உயிருள்ளவரை இருப்பேன் என்று ஆத்தூர் ஒன்றிய அனைத்து கட்சி செயல் வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு, 2016 தேர்தலின்போது பணமா பாசமா என்ற நிலை வந்தபோது பாசத்தின் பக்கம் நின்று என்னை அமோகமாக வெற்றிபெறச் செய்தவர்கள் ஆத்தூர் தொகுதி மக்கள் என்று அமைச்சர் ஐ.பெரியசாமி உருக்கமாக பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் தொடர்ந்து 9 வது முறையாக போட்டியிடும் திமுக வெற்றி வேட்பாளார் அமைச்சர் ஐ.பெரியசாமி உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரிக்கும் ஆத்தூர் ஒன்றிய செயல் வீரர்கள் கூட்டம், சீவல்சரகு ஊராட்சி ஆதிலெட்சுமிபுரத்தில் நடைபெற்றது.



கூட்டத்திற்கு திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் தலைமை தாங்கினார். உணவு மற்றும் உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்ட செயலாளர்கள் செல்வராகவன் (மதிமுக), பாலசுப்பிரமணி (காங்கிரஸ்), தண்டபாணி (விடுதலை சிறுத்தைகள் கட்சி) மற்றும் ஏ.பி.மணிகண்டன் (இந்திய கம்யூனிஸ்ட்), மற்றும் ஆத்தூர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கள்ளிப்பட்டி மணி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக துணைச் செயலாளர்கள் ஆ.நாகராஜன், பிலால் உசேன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், பொருளாளர் சத்தியமூர்த்தி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி வரவேற்று பேசினார்.

கூட்டத்தில் கலந்து கொண்டு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்த அமைச்சர் ஐ.பெரியசாமி பொதுமக்கள் மத்தியில் பேசும்போது கடந்த 5 ஆண்டுகளாக தமிழகத்தை ஆளும் திராவிட மாடல் ஆட்சி நாயகன் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திமுக அரசு 2021 தேர்தலின்போது சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளது. குறிப்பாக ஆத்தூர் தொகுதியில் ஏழை மாணவர்கள் பயில இரண்டு கல்லூரிகள் கொண்டுவந்துள்ளது. இதைத்தவிர விரைவில் இப்பகுதியில் தொழிலாளர் நல மருத்துவமனை (ஈ.எஸ்.ஐ) டைடல் பார்க், மாபெரும் விளையாட்டு அரங்கம், போக்குவரத்து பணி மனை உட்பட பல்வேறு நலத்திட்டப் பணிகள் நடைபெற உள்ளது. 2021ம் ஆண்டு தேர்தலின்போது நடைபெற்ற தேர்தலின்போது பணமா, பாசமா என்ற நிலை வந்தபோது பாசத்துடன் என்னை ஆதரித்து பாசத்தை நிரூபித்துக் காட்டியவர்கள் ஆத்தூர் தொகுதி மக்களாகிய நீங்கள் உங்களுக்கு ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஆத்தூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெறுவது மட்டுமின்றி உயிருள்ளவரை உங்;கள் குடும்பத்தில் ஒருவராக இருப்பதுதான் என் வாழ்நாள் ஆசையாக கருதுகிறேன். 2026 சட்டமன்ற தேர்தல் முடிந்த பின்பு ஆத்தூர் தொகுதி மக்கள் வைத்த அனைத்து கோரிக்கைகளையும், தொடர்ந்து நிறைவேற்றுவேன், இது உறுதி என்றார்.

செயல்வீரர்கள் கூட்டத்தில் ஆத்தூர் ஒன்றிய திமுக செயலாளர்கள் பிள்ளையார்நத்தம் முருகேசன், பாறைப்பட்டி ராமன், இராஜேந்திரன், முன்னாள் ஒன்றிய செயலாளர் பி.சி.முரளிதரன், ஒன்றிய துணை செயலாளர்கள் கருத்தராஜா, கலாபச்சை, ராஜேந்திரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் நாகலெட்சுமி சசிகுமார், கருப்பையா, சிவக்குமார், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் காணிக்கைசாமி, பாப்பாத்தி, செல்வி காங்கேயன், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், மில்மேடு அருண்பாண்டியன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



# "கொடைக்கானலில் எகிறும் தேர்தல் ஜுரம்!" - அதிமுக வேட்பாளர் ரவி மனோகரன் அறிமுகக் கூட்டத்தில் திரண்ட கூட்டணிப் படை

கொடைக்கானல் ஏப். 4-

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் அதிமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் பங்கேற்ற பிரம்மாண்ட வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது.

முன்னாள் முப்பெரும்துறை அமைச்சர் நத்தம் ரா. விசுவநாதன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. முன்னாள் பழனி சட்டமன்ற உறுப்பினர் வேணுகோபால் முன்னிலை வகித்தார்.

*பங்கேற்ற கூட்டணிக் கட்சி நிர்வாகிகள்:*

இந்த அறிமுகக் கூட்டத்தில், பாஜக பழனி சட்டமன்ற அமைப்பாளர் கனகராஜ், திண்டுக்கல் மேற்கு மாவட்டத் துணைத் தலைவர் மருத்துவர் மதன்குமார், ஐ.ஜே.கே மாவட்டத் தலைவர் ஜோஷ்வா, துணைத் தலைவர் திலீபன், தென்னிந்திய பார்வர்டு பிளாக் மாநிலத் தலைவர் சபரி, தமிழ் தேசிய பார்வர்டு பிளாக் மாநிலச் செயலாளர் கோடை ஆனந்த், பாமக மாவட்டச் செயலாளர் வைரமுத்து, அமமுக திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் கே.பி. நல்லசாமி பங்கேற்றனர்.

*தொண்டர்கள் எழுச்சி:* என்.டி.ஏ கூட்டணியைச் சேர்ந்த நகர மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், தொண்டர்கள் என ஆயிரக்கணக்கானோர் திரண்டு வேட்பாளர் ரவி மனோகரனுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். தொகுதியின் வளர்ச்சி மற்றும் தேர்தல் வியூகங்கள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

# வட தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 5 டிகிரி உயர வாய்ப்பு

சென்னை, ஏப்.4-

வட தமிழகம், புதுச்சேரியில் அதிகபட்ச வெப்பநிலை நாளை முதல் 7ம் தேதி வரை வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மரத்வாடா முதல் தென் தமிழகம் வரை உள் கர்நாடகம் வழியாக 900 மீட்டர் உயரத்தில் ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நாளை (ஏப்.4) ஓரிரு இடங்களிலும், 5, 6 தேதிகளில் ஒருசில இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

7ம் தேதி தமிழக கடலோர மாவட்டங்கள், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலுமும், 8, 9 தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

வட தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நாளை முதல் ஏப்.7ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட ஓரிரு இடங்களில் 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாகவும், தென் தமிழகத்தில் வழக்கமான அளவிலும் இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 99 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 79 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக தேனி மாவட்டம் சோத்துப்பாறையில் 9 செமீ, கோவை மாவட்டம் சின்னக்கல்லாரில் 7 செமீ, வால்பாறை, சின்கோனாவில் 5 செமீ, சோலையார், தேனி மாவட்டம் தேக்கடியில் தலா 1 செமீ மழை பதிவாகியுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

# "அருந்ததியர் சமுதாயத்தின் அரண் திமுக அரசு!" உள் ஒதுக்கீடு முதல் அரசு வேலை வரை ஐ.பெரியசாமி பேச்சு

சின்னாளபட்டி, ஏப்.4-

2026 சட்மன்ற தேர்தலுக்கு பிறகு 1.5 லட்சம் அரசுப் பணிகளில் கிராமப்புற மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று அம்பாத்துரை ஊராட்சியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர்; ஐ.பெரியசாமி பேசியதோடு, அருந்ததியர் சமுதாய மக்களுக்கு என்றும் உறுதுணையாக இருப்பது திமுக அரசு என்று இந்திரா காலனியில் நடைபெற்ற பிரச்சாரத்தில் பொதுமக்கள் மத்தியில் பேசினார்.

ஆத்தூர் ஒன்றியம், அம்பாத்துரை ஊராட்சிக்குட்பட்ட பெருமாள்கோவில்பட்டி, முருகன்பட்டி, ஐ.பி.நகர், மேலக்கோட்டை, இந்திராபுரம், கதிர்பட்டி, நடுப்பட்டி, குரும்பபட்டி ஆகிய கிராமங்களுக்கு சென்று பொதுமக்கள்



மத்தியில் தமிழக அரசின் சாதனை திட்டங்களையும், ஆத்தூர் தொகுதியில் தான் (ஐ.பெரியசாமி) செயல்படுத்திய நலத்திட்டங்களையும் பட்டியலிட்டு பேசியதோடு, சட்டமன்ற தேர்தலுக்கு பிறகு ஆத்தூர் தொகுதியில் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களையும் பொதுமக்கள் மத்தியில் பேசி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.

கடந்த 14 வருடங்களுக்கு முன்பு முத்தமிழ் அறிஞர் முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள், அருந்ததியர் சமுதாய மக்களுக்கு 3 சதவீத இட உள் ஒதுக்கீடு வழங்கியதின் பயனாக லட்சக்கணக்கானோர் பயன்பெற்றனர். கல்வி, அரசுப்பணி, மற்றும் இதர வேலைகளில் முன்னுரிமை பெற்று வருகின்றனர். சட்டமன்ற தேர்தலுக்கு பிறகு கூட்டுறவு துறை, பழனி கோயில், சத்துணவு, வருவாய்த்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறையில் காலியாக உள்ள 1.5 லட்சம் அரசு காலி பணியிடங்களில் அருந்ததியர் சமுதாய மக்கள் மற்றும் கிராமப்புற ஏழை மாணவர்களுக்கு முன்னுரிமை அளித்து வழங்கப்படும் என்றார். அதன் பின்னர் அமைச்சர் ஐ.பெரியசாமி அங்குள்ள கோயிலுக்கு சென்று வழிபாடு செய்த பின்பு, தனது தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கினார்.

நிகழ்ச்சியின்போது கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் பிள்ளையார்நத்தம் முருகேசன், ராஜேந்திரன், திமுக நிர்வாகிகள் அம்பை ரவி, டி.ஆர். விஜயபாலமுருகன், மாவட்டதொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன், மணி, தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் வாஞ்சிநாதன், கணேசன், முன்னாள் ஊராட்சி தலைவர்கள் தொப்பம்பட்டி கருப்பையா, சிவக்குமார், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பாப்பாத்தி, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் நாகவள்ளி, காணிக்கைசாமி, ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## அண்ணாமலைக்கு சீட் கொடுக்காமல் அதிர்ச்சி பாஜக வேட்பாளர் பட்டியல் சொல்லும் சேதி என்ன?



சென்னை, ஏப்.4- நீண்ட இழுபறிக்குப் பின்னர் பாஜகவின் வேட்பாளர் பட்டியல் வெளியாகியுள்ளது. எல்லோரும் கணித்தபடியே வேட்பாளர் பட்டியல் அமைந்திருந்தாலும், யாரும் எதிர்பார்க்காத வகையில் அண்ணாமலைக்கு சீட் மறுக்கப்பட்டுள்ளது அதிர்வலைகளை உருவாக்கியிருக்கிறது.

அதிமுக கூட்டணியில் முதல் ஆளாக 27 தொகுதிகளை கேட்டு வாங்கிய பாஜக, அந்தக் கூட்டணியில் கடைசி ஆளாக வேட்பாளர் பட்டியலை அறிவித்துள்ளது. தொகுதிப் பங்கீட்டின்போதே பாஜகவுக்கு, அதிமுக வெற்றி வாய்ப்பு இல்லாத பெரும்பாலான தொகுதிகளை தள்ளிவிட்டதாக அண்ணாமலை உள்ளிட்ட சிலர் விமர்சனம் செய்ததாக தகவல்கள் வெளியானது.

இதன் காரணமாக, அதிமுகவிடம் சில தொகுதிகளை மாற்றி வாங்கும் பணியில் பாஜக தீவிரமாக இருந்ததாகவும் தகவல்கள் பரவின. ஆனால், இவற்றை பற்றியெல்லாம் கவலைப்படாமல், தொகுதிப் பங்கீட்டை முடித்த கையோடு வேட்பாளர்களையும் அறிவித்து ஒரு வாரமாக பிரச்சாரமும் மேற்கொண்டு வருகிறார் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி.

சில முக்கிய தலைவர்கள் ஒரே தொகுதியை குறிவைத்து கேட்டதும், வேட்பாளர் அறிவிப்பு தாமதமானதற்கு காரணமாக சொல்லப்படுகிறது.

வேட்புமனு தாக்கல் நிறைவடைய இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், ஒரு வழியாக வேட்பாளர்களை அறிவித்துள்ளது பாஜக.

கடந்த முறை நெல்லையில் வென்ற நயினார் நாகேந்திரன் இம்முறை சாத்தூரிலும், கடந்த முறை கோவை தெற்கில் வென்ற வானதி சீனிவாசன் இம்முறை கோவை வடக்கிலும் போட்டியிடுகின்றனர்.

பொன். ராதாகிருஷ்ணன் கடுமையாக முயற்சி செய்த போதிலும், நாகர்கோவில் தொகுதி மீண்டும் எம்.ஆர்.காந்திக்கே ஒதுக்கப்பட்டுள்ளது.

மொடக்குறிச்சியில் கடந்தமுறை வென்ற சி.சரஸ்வதிக்கு பதிலாக அவரின் மருமகளான கிருத்திகா சிவக்குமாருக்கு இம்முறை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதனை தவிர்த்து, அவிநாசி (தனி) தொகுதியில் மத்திய இணையமைச்சர் எல். முருகன் களமிறங்குகிறார். மயிலாப்பூரில் முன்னாள் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜனும், மதுரை தெற்கில் ராம சீனிவாசனும், தஞ்சையில் கருப்பு முருகானந்தமும் போட்டியிடுகின்றனர்.

இந்த முறை பல்வேறு புதுமுகங்களுக்கும் பாஜக சார்பில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், தொகுதியளவில் பரிச்சயமானவர்களுக்கே அதிகளவில் சீட்டுகள் கொடுக்கப்பட்டுள்ளது. 5 பெண்கள் இம்முறை பாஜக சார்பில் களம் காணுகின்றனர்.

காங்கிரஸில் இருந்து எல்எல்ஏ பதவியை ராஜினாமா செய்துவிட்டு, பாஜகவில் 4 ஆண்டுகளாக பொறுப்பு ஏதும் வழங்கப்படாமல் இருந்த விஜயதரணிக்கு இம்முறை விளவங்கோட்டில் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

பாஜக தனக்கு கிடைத்த 27 தொகுதிகளில், ஒரு தொகுதியை தென்னிந்திய பார்வர்டு பிளாக் கட்சிக்கு கொடுத்துள்ளது. அக்கட்சியின் தலைவர் திருமாறன், திருப்பத்தூரில் தாமரை சின்னத்தில் போட்டியிடுகிறார். அதே நேரத்தில், பாஜகவில் தங்களுக்கு ஓர் இடம் வழங்கப்படும் என எதிர்பார்த்திருந்த புதிய நீதிக் கட்சிக்கு சீட் ஒதுக்கப்படவில்லை.

அண்ணாமலைக்கு சீட் இல்லை:

பாஜக வேட்பாளர் பட்டியலில் இப்போதைக்கு அனைவருக்குமான பெரும் ஷாக், ஒரு கட்டத்தில் பாஜகவின் முதல்வர் வேட்பாளராக பார்க்கப்பட்ட அண்ணாமலைக்கு சீட் கொடுக்காததுதான்.

இம்முறை தொகுதி மற்றும் வேட்பாளர் தேர்வில் நயினார் நாகேந்திரன், எல்.முருகனின் கையே ஓங்கியிருந்தது. இதனால், அவர்கள் அண்ணாமலைக்கு சாதகமான தொகுதிகளை கேட்டுப் பெறாமல் இருந்துவிட்டனர் என்று அவரின் ஆதரவாளர்கள் குற்றம்சாட்டுவதாக சொல்லப்படுகிறது.

கடந்த முறை அரவக்குறிச்சியில் போட்டியிட்ட அண்ணாமலைக்கு, இம்முறை கோவையின் சிங்காநல்லூர் அல்லது கவுண்டம்பாளையம் தொகுதிகளை கேட்டுவந்தார். ஆனால், இம்முறை அதிமுக கூட்டணியில் பாஜகவுக்கு கோவை வடக்கு தொகுதி மட்டுமே ஒதுக்கப்பட்டது. இதனால் மொடக்குறிச்சியில் அண்ணாமலையை போட்டியிட சொல்லி தலைமை கேட்டுக்கொண்டது. ஆனால், தனக்கு சாதகமான தொகுதி எதுவும் இல்லாததால் இம்முறை போட்டியிடுவதில்லை என்று அண்ணாமலை உறுதியாக மறுத்துவிட்டதாக சொல்லப்படுகிறது.

அண்ணாமலை தலைமையில் மூன்றாவது அணியமைத்து 2024 மக்களவைத் தேர்தலில் களம் கண்ட பாஜக, பல தொகுதிகளில் இரண்டாம் இடம் பிடித்தது. பாஜகவின் எழுச்சிக்கு காரணமாக அக்கட்சியின் இளைய தலைமுறையால் கொண்டாடப்பட்ட அண்ணாமலைக்கு சீட் வழங்கப்படாதது, ஒரு தரப்பினருக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது உண்மை. இதன் காரணமாக கொங்கு மண்டலத்தில் பாஜகவின் செல்வாக்குக்கு பாதகம் உருவாகலாம் என்றும் அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்ணாமலை மட்டுமல்லாமல் பாஜகவில் பொன்.ராதாகிருஷ்ணன், குஷ்பு, அஸ்வத்தாமன், எஸ்.ஜி.சூர்யா, வினோஜ் .பி.செல்வம் போன்றோரும் இம்முறை தங்களுக்கு சீட் கிடைக்காத வருத்தத்தில் இருப்பதாகவும் அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

வேட்பாளர் பட்டியல் குறித்து கருத்து தெரிவித்த அண்ணாமலை, 'ஒரு தொண்டனாக பாஜகவின் வெற்றிக்கு உழைப்பேன். தேசிய ஜனநாயக கூட்டணி 210 தொகுதிகளில் வெற்றிபெற பாடுபடுவேன்" என்று தெரிவித்துள்ளார்.

அதிமுகவுடனான தொகுதி பங்கீடு மல்லுக்கட்டு, உள் கட்சி தலைவர்களுடனான சீட் பஞ்சாயத்தை தாண்டி ஒருவழியாக வேட்பாளர்களை பட்டியலை வெளியிட்டுள்ளது. இது வெற்றி பட்டியலாக இருக்குமா என்பது மே4ல் தெரியும்.

## “ஓட்டப்பிடாரத்தில் ‘குக்கர்’ விசில் சத்தம்!” திணறும் திமுக! அதிர வைக்கும் முதல் கட்ட தேர்தல் களம்

ஓட்டப்பிடாரம் ஏப்.4- தமிழகத்தின் மிக முக்கியமான மற்றும் 'சென்சிடிவ்' தொகுதியாகக் கருதப்படும் ஓட்டப்பிடாரத்தில், 2026 சட்டமன்றத் தேர்தல் களம் முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிரடித் திருப்பங்களைக் கண்டுள்ளது.

* திமுக விற்குப் பின்னடைவு ஏன்?*

கடந்த முறை சண்முகையா எம்.எல்.ஏவாக இருந்தபோது தொகுதியில் நடைபெற்றதாகக் கூறப்படும் 'கட்ட பஞ்சாயத்து' மற்றும் அடிதடிச் சம்பவங்கள் பொதுமக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இது ஒருபுறமிருக்க, தற்போது திமுக சார்பில் களம் இறக்கப்பட்டுள்ள ராமஜெயம் தென்திருப்பேரையைச் சேர்ந்தவர் (வெளியூர்)





என்பதால், "எங்கள் குறைகளைச் சொல்ல உள்ளூர் ஆள் இல்லையே" என்ற ஆதங்கம் வாக்காளர்கள் மத்தியில் பரவலாக எழுந்துள்ளது.

* அமமுகவின் 'மண்ணின் மைந்தன்' வியூகம்:*

முன்னாள் எம்.எல்.ஏவும், தற்போதைய அமமுக வேட்பாளருமான சுந்தர்ராஜன், 'மண்ணின் மைந்தன்' என்ற அடையாளத்துடன் களமிறங்கியுள்ளார். குறிப்பாகக் கருங்குளம், தருவைக்குளம், பசுவந்தனை உள்ளிட்ட கிராமப்புறப் பகுதிகளில் பெண்கள் மத்தியில் இவருக்குக் கிடைத்து வரும் வரவேற்பு அரசியல் வட்டாரங்களை வியக்க வைத்துள்ளது. இதனால் 'குக்கர்' சின்னத்தின் செல்வாக்கு மளமளவென வளர்ந்து வருகிறது.

*எச்சரிக்கையும்.. எதிர்பார்ப்பும்:*

திமுகவில் நிலவும் 'உள்குத்து' வேலைகள் அமமுகவிற்குச் சாதகமாக அமைய வாய்ப்பிருந்தாலும், வேட்பாளர் சுந்தர்ராஜன் மிகவும் எச்சரிக்கையாகக் காய்களை நகர்த்த வேண்டும் எனத் தொண்டர்கள் மத்தியில் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது.

*"வெற்றிச் சக்கரம் யாருக்கு?"* கடந்த கால கசப்பான சம்பவங்கள் மற்றும் வெளியூர் வேட்பாளர் தேர்வு ஆகியவற்றால் திமுக தடுமாறும் வேளையில், உள்ளூர் செல்வாக்கை மூலதனமாக வைத்து அமமுக ஓட்டப்பிடாரத்தில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தத் தயாராகி வருகிறது.

சக்கர வியூகம்
(செய்தியாளர் குழு)

## ராஜா ரவி வர்மாவின் யசோதா, கிருஷ்ணா வண்ண ஓவியம் ஏலத்தில் ரூ.167 கோடிக்கு விற்பனை

புதுடெல்லி, ஏப்.4- புகழ்பெற்ற இந்திய ஓவியர் ராஜா ரவி வர்மாவின் யசோதா மற்றும் கிருஷ்ணா வண்ண ஓவியம் ரூ.167 கோடிக்கு விற்பனையாகி உள்ளது.

சர்வதேச முன்னணி ஏல நிறுவனமான 'சஃப்ரான் ஆர்ட்' சார்பில் வசந்தகால நேரடி ஏலம் மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் புகழ்பெற்ற இந்திய ஓவியர் ராஜா ரவி வர்மாவின் யசோதா மற்றும் கிருஷ்ணா வண்ண ஓவியம் ரூ.167.2 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டது. இதன் மூலம் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட நவீன இந்தியக் கலையின் மிக உயர்ந்த மதிப்பு மிக்க படைப்பாக இது உருவெடுத்துள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஏலத்தில் சுமார் ரூ.118 கோடிக்கு விற்பனையான எம்.எஃப். ஹுசைனின் 'பெயரிடப்படாத (கிராம் யாத்ரா)' ஓவியத்தின் சாதனையை



இந்தப் படைப்பு முறியடித்துள்ளது. ரூ.80 கோடி முதல் ரூ.120 கோடி வரை மதிப்பிடப்பட்ட இந்த ஓவியத்தை, சீரம் இன்ஸ்டிடியூட் ஆஃப் இந்தியா நிறுவன நிர்வாக இயக்குநர் டாக்டர் சைரஸ் எஸ் .பூனாவாலா வாங்கியுள்ளார்.

இது குறித்து பூனாவாலா கூறும்போது, "ராஜா ரவிவர்மாவின் ஓவியத்தைப் பாதுகாக்கும் வாய்ப்பு கிடைத்ததை நான் பெருமையாகக் கருதுகிறேன். இந்த தேசியச் செல்வம் அவ்வப்போது பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும், அதைச் செயல்படுத்த நான் முயற்சிப்பேன்" என்றார்.

1890களில் வரையப்பட்டது: 1890களில், ரவிவர்மா கலைப் பயணத்தின் உச்சத்தில் இருந்த போது இந்த ஓவியம் வரையப்பட்டது. யசோதை பசுவிடம் பால் கறப்பதையும், குழந்தை கிருஷ்ணன் பின்னால் இருந்து ஒரு கிண்ணத்தில் பாலை எடுக்க முயற்சிப்பதையும் இந்த ஓவியம் சித்தரிக்கிறது. இது ரவி வர்மாவின் மிகவும் குறிப்பிடத்தக்க படைப்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.



## அமெரிக்கா இஸ்ரேல், ஈரான் போர் தாக்கம் மார்ச்சில் இந்தியாவின் டீசல் ஏற்றுமதி 20% உயர்வு

புதுடெல்லி, ஏப்.4- அமெரிக்கா, ஈரான் இடையிலான போர் காரணமாக, மார்ச் மாதத்தில் இந்தியாவின் டீசல் ஏற்றுமதி 20% அதிகரித்துள்ளது. அமெரிக்காஇஸ்ரேல், ஈரான் போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டுள்ளது.

இதனால் கச்சா எண்ணெய் கப்பல்கள் போக்குவரத்து முடங்கி, கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வருகிறது. இந்நிலையில், கச்சா எண்ணெய் விலைக்கும் சுத்திகரிக்கப்பட்ட டீசல் விலைக்கும் இடையே அதிகரித்து வரும் இடைவெளி காரணமாக, மார்ச் மாதத்தில் இந்தியாவின் டீசல் ஏற்றுமதி முந்தைய மாதத்தை விட 20% உயர்ந்துள்ளது. இருப்பினும், கப்பல் போக்குவரத்து தரவுகளின்படி, சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருட்களின் மொத்த ஏற்றுமதி 8% சரிந்துள்ளது.

பொதுவாக, சுத்திகரிப்பு நிறுவனங்கள் லாபகரமான 'கிராக் ஸ்பிரட்' மற்றும் மார்ஜின்களைப் பயன்படுத்திக் கொள்ள தங்கள் உற்பத்தி கலவையை மாற்றியமைக்கின்றன. 'கிராக் ஸ்பிரட்' என்பது கச்சா எண்ணெய் விலைக்கும் அதிலிருந்து பெறப்படும் சுத்திகரிக்கப்பட்ட பொருட்களின் விலைக்கும் இடையிலான வித்தியாசத்தைக் குறிக்கிறது.

'மார்ஜின்' என்பது செலவுகள் மற்றும் செயல்பாட்டுத் திறனுக்குப் பிறகு சுத்திகரிப்பு நிறுவனங்கள் ஈட்டும் லாபத்தைக் குறிக்கிறது. ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்ட நிலையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தாலும், அதன் தாக்கம் பல்வேறு எரிபொருட்களில் மாறுபட்டுள்ளது.

டீசல் மற்றும் ஜெட் எரிபொருளுக்கான கிராக் ஸ்பிரட்கள் புதிய உச்சத்தை எட்டியுள்ளன. அதேநேரம் பெட்ரோலுக்கான விலை ஓரளவுக்கு நிலையாகவே உள்ளன. கப்பல்களைக் கண்காணிக்கும் 'கெப்லர்' நிறுவனத்தின் தரவுகளின்படி, பிப்ரவரி மாதத்தில் 107.4 கோடி பீப்பாய்களாக இருந்த டீசல் ஏற்றுமதி, மார்ச் 1 முதல் 28 வரையிலான காலத்தில் 129 கோடி பீப்பாய்களை எட்டியுள்ளது. இதனிடையே, மார்ச் மாதத்தில் இந்தியாவின் பெட்ரோல் ஏற்றுமதி 33% குறைந்து 83.1 கோடி பீப்பாய்களாக வீழ்ச்சிஅடைந்தது.

## அரசு வகுக்கும் கொள்கைகளின் பலன்களை பரிசோதிக்கும்படி நீதிமன்றங்களை கேட்பது ஆபத்தானது சென்னை உயர்நீதிமன்றம் கருத்து

சென்னை, ஏப்.4- அரசு வகுக்கும் கொள்கைகளின் பலன்களை பரிசோதிக்கும்படி நீதிமன்றங்களை கேட்பது ஆபத்தானது என்று சென்னை உயர்நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது. மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தில் வேலூரைச் சேர்ந்த பிரவீனாவுக்கு உதவி தர உத்தரவு அளித்த தனி நீதிபதி உத்தரவை எதிர்த்து அரசு தரப்பில் தொடர்ந்த மேல்முறையீட்டில் சென்னை ஐகோர்ட் கருத்து தெரிவித்துள்ளது. நடைமுறையில் இல்லாத திட்டத்தின் கீழ் பலன்களை வழங்கும்படி உத்தரவிட முடியாது. அரசுப் பள்ளி மாணவிகள் உயர் கல்வியில் சேரும் எண்ணிக்கையை அதிகரிக்கவே திட்டம் மாற்றப்பட்டுள்ளது

## ஆம் ஆத்மி ராகவ் சத்தாவின் மாநிலங்களவை பதவி நீக்கம்

புதுடெல்லி, ஏப்.4- டெல்லி மதுபான கடைகள் ஒதுக்கீட்டு வழக்கில் கடந்த 2024ம் ஆண்டில் கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டார்.

அப்போது ஆம் ஆத்மி சார்பில் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன. இதில் மாநிலங்களவை எம்.பி.யான ராகவ் சத்தா பங்கேற்கவில்லை. கடந்த பிப்ரவரி மாதம் மதுபான ஒதுக்கீட்டு வழக்கில் கெஜ்ரிவால் விடுதலை செய்யப்பட்டார். அப்போதும் ராகவ் சத்தா எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை.



ஆம் ஆத்மியின் வெற்றி கொண்டாட்டங்களில் அவர் பங்கேற்கவில்லை.

கடந்த 2025ம் ஆண்டு குளிர்கால கூட்டத் தொடர் மற்றும் தற்போதைய பட்ஜெட் கூட்டத் தொடரில் ஆம் ஆத்மி சார்பில் பேச அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. உணவு கலப்படம், விமான நிலையங்களில் அதிக விலைக்கு உணவு பொருட்கள் விற்பனை செய்யப்படுவது குறித்து அவர் தனது கருத்துகளை முன்வைத்தார். ஆம் ஆத்மி கட்சி சார்பாக அவர் எதுவும் பேசவில்லை.

இந்த சூழலில் ஆம் ஆத்மியின் மாநிலங்களவைத் துணைத் தலைவர் பதவியில் இருந்து ராகவ் சத்தா நீக்கப்பட்டு உள்ளார். அவருக்கு பதிலாக புதிய துணைத் தலைவராக அசோக் மிட்டல் நியமிக்கப்பட்டு உள்ளார். இதுதொடர்பாக ஆம் ஆத்மி சார்பில் மாநிலங்களவை செயலாளரிடம் கடிதம் அளிக்கப்பட்டு உள்ளது.

## “பிரதமர் மோடி வருகையால் கெடுபிடி... புதுச்சேரி மக்கள் கடும் அவதி” நாராயணசாமி சாடல்

புதுச்சேரி, ஏப்.4- பிரதமர் மோடி வருகைக்காக போலீஸார் காட்டும் கெடுபிடியால் புதுச்சேரி மக்கள் அவதியடைந்திருப்பதாக முன்னாள் முதல்வர் நாராயணசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

புதுச்சேரிக்கு இன்று பிரதமர் மோடி வருகிறார். அதற்காக அஜந்தா சிக்னல் தொடங்கி காமராஜர் சிலை வரை ரோடு ஷோ செல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியில் உள்ள அனைத்து சாலைகளும் தடுப்புகள் வைத்து நேற்றே மூடப்பட்டு, போலீஸார் மற்றும் மத்திய பாதுகாப்பு படையினர் தொடர்ந்து கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.



இதனால், இப்பகுதியிலுள்ள காமராஜர் சாலை, 45 அடி சாலை தொடங்கி பல சாலைகளில் தடுப்புகள் வைக்கப்பட்டிருந்தது. இதனால் சிறிய சாலைகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. போக்குவரத்து நெரிசலில் சிக்கி உள்ளூர் மக்கள் முதல் சுற்றுலாப் பயணிகள் வரை மன உளைச்சலுக்கு ஆளானார்கள்.

இது குறித்து முன்னாள் முதல்வர் நாராயணசாமி வெளியிட்ட வீடியோ பதிவில், "பிரதமர் வருகைக்கு 2 நாள் முன்பாகவே மிகப் பெரிய கெடுபிடியை காவல்துறை செய்து வருகிறது. அஜந்தா சிக்னல் தொடங்கி காமராஜர் சிலை வரை உள்ள கடைகள் மூடப்பட்டுள்ளன. பொதுமக்கள் நடமாட்டம் இல்லை. மருத்துவமனைக்கும், கடைகளுக்கும் மக்கள் செல்ல முடியவில்லை. மக்கள் அலைக்கழிக்கப்பட்டு திருப்பி அனுப்புகிறார்கள். வேலை செல்ல சிரமம். பொதுமக்கள் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் இன்று மாலை 4 மணிக்கு வருகிறார் என்பதற்காக நேற்று முதல் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. மக்கள் வெளியில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. முக்கிய சாலைகளில் செல்ல வேண்டிய மக்கள் திருப்பிவிடப்பட்டதால் சிரமம் அடைந்துள்ளனர். பாதுகாப்பு என்கின்ற பேரில் காவல் துறை செயல்பாடு மக்கள் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பொதுமக்கள் தேர்தல் பிரச்சாரத்துக்கு இடையூறு செய்யப்போவதில்லை. காவல் துறையும் மாவட்ட நிர்வாகமும் மக்களை பெரிய அளவில் பாதிக்க செய்துள்ளனர்.

மாவட்ட நிர்வாகம் தேர்தல் துறை கட்டுப்பாட்டில் உள்ளதால் அவர்கள் தான் பொறுப்பு. பிரதமர் வருகையால் பொது மக்களை துன்புறுத்துவது ஏற்புடையதல்ல. இடையூறு இல்லாமல் பிரச்சாரம் நடத்தலாம்.

போலீஸ், மாவட்ட நிர்வாகம் கெடுபிடி கண்டிக்கத்தக்கது. தனி நபருக்காக மக்கள் அவதிப்பட அவசியமில்லை. பிரதமர் வரும் இரண்டு மணி நேரம் முன்பு மூடினால் ஏற்கலாம். ஆனால் 24 மணி நேரமாக மூடியிருப்பது தவறானது" என்று நாராயணசாமி கூறினார்.



# உழவர் சந்தையில் உதயசூரியன் முழக்கம்! உடுமலை வேட்பாளர் மு.ஜெயக்குமார் தீவிர வாக்கு சேகரிப்பு

திருப்பூர், ஏப்.4-

திருப்பூர் மாவட்டம், உடுமலை சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் மு. ஜெயக்குமார் அவர்கள், இன்று உடுமலை நகரில் அமைந்துள்ள உழவர் சந்தையில் விவசாயிகளிடமும், பொதுமக்களிடமும் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.உடன் நகர கழகச் செயலாளர் வேலுச்சாமி, நகர மன்றத் தலைவர் மத்தீன், பொதுக்குழு உறுப்பினர் யு.என்.பி. குமார், வக்கீல் சிதம்பரசாமி, நகர மன்ற உறுப்பினர்கள் அயுப்சான், அர்ஜுனன் மற்றும் உடுமலை நகர கழக நிர்வாகிகள் திரளாகக் கலந்து கொண்டனர்.



■ தேனி மாவட்டம் போடிநாயக்னூர் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் முன்னாள் தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் திமுக வேட்பாளர் தேர்தல் அலுவலகம் திறப்பதற்கு முகூர்த்தக்காலை வேட்பாளர் ஓ.பன்னீர்செல்வம் அவர்களால் நடப்பட்டது. உடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிந்திரநாத் குமார் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன் உட்பட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், மத்திய சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆரப்பாளையத்தில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த பறக்கும் படையினர் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்தார்.



# அய்யூர் கிராமத்தில் கரந்தமலை செல்லாயி அம்மன் கோவில் பங்குனி உற்சவ விழா

அலங்காநல்லூர்.ஏப்.04-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள அய்யூர் கிராமத்தில் செல்வவிநாயகர், மண்டுகருப்பணசாமி, கரந்தமலை, செல்லாயி அம்மன், அய்யனார், சப்தகன்னிமார்கள், அரபுமஸ்தான் ஆகிய காவல் தெய்வங்களுக்கு பங்குனி மாத உற்சவ விழா நடைபெற்றது.

முதல் நாள் நிகழ்ச்சியாக கொடியேற்றி காப்பு கட்டுகளுடன் நிகழ்ச்சி தொடங்கியது. செவ்வாய்க்கிழமை அன்று மாலை பொங்கல் வைத்து அய்யனார் சுவாமி கண் திறப்பு விழா மற்றும் காலையில் கிடா வெட்டுதல், செல்லாயி அம்மன் கோவிலில் பொங்கல் வைத்தல் மந்தையில் அமைந்துள்ள கோவிலுக்கு வந்து சிறப்பு பூஜைகள் கிராமத்தின் சார்பாக நடைபெற்றது. தொடர்ந்து அன்று காலை நேர்த்தி கடன் செலுத்தினர்.

வினோதமாக நடந்த திருவிழாவில் இந்துக்கள் மற்றும் முஸ் லிம்கள் இணைந்து இந்த திருவிழாவை கொண்டாடினர். அடுத்த நாள் நிகழ்வாக அம்மன் முலைப்பாறியுடன் கிராம வீதிகளில் மேளதாளங்கள் முழங்க வானவேடிக்கையுடன் உலா வந்தார். அப்போது கிராம பொதுமக்கள் சார்பாக வாழைப்பழம் சூறை விடப்பட்டது. அம்மன் பூஞ்சோலை செல்லும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்த விழாவுக்கான ஏற்பாடுகளை நாட்டாமை கதிரேசன், மற்றும் முக்கியஸ்தர்கள் நடராஜன், பாக்கியம், சோமு, திருஞானம் ராஜா, சுப்பையா, மற்றும் அய்யூர் கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.



# மடத்தகுளத்தில் அமமுக வேட்பாளர் சி.சண்முகவேலுக்கு எஸ்.பி.வேலுமணி ஆதரவு திரட்டினார்

திருப்பூர், ஏப்.4-

திருப்பூர் மாவட்டம், மடத்தகுளம் சட்டமன்றத் தொகுதி அமமுக வேட்பாளர் சி.சண்முகவேலுக்கு ஆதரவாக, முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி சிறப்புரையாற்றினார்.

புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் கால சாதனைகளை விளக்கிய அவர், எடப்பாடியார் தலைமையில் மீண்டும் அ.தி.மு.க ஆட்சி அமையும் என முழங்கினார். இந்நிகழ்வில் திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மடத்தகுளம் சட்டமன்ற உறுப்பினருமான சி.மகேந்திரன் மற்றும் அ.தி.மு.க, அமமுக கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




# “நாளைய தொழில்நுட்ப நாயகர்கள்!” - சோனா கல்லூரியின் 29 ஆண்டுகால கல்விப் பயணத்தில் ஒரு பொற்கணமிது

சேலம் ஏப். 4-

சேலம் சோனா தொழில்நுட்பக் கல்லூரியின் 29வது ஆண்டு விழா கல்லூரி வளாகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கல்லூரியின் தலைவர் வள்ளியப்பா தலைமையேற்று விழாவைத் தொடங்கி வைத்தார். துணைத் தலைவர்கள் சொக்கு வள்ளியப்பா, தியாகு வள்ளியப்பா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.ஆர். ஆர். செந்தில்குமார் வரவேற்புரை ஆற்றி ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பித்தார். அதில் மாணவர்களின் 100% வேலைவாய்ப்பு, தேசிய அளவிலான விளையாட்டுச் சாதனைகள், தொழில்நுட்பக் கருத்தரங்குகள் மற்றும் ஆராய்ச்சிப் பணிகளில் கல்லூரி பெற்றுள்ள முதன்மை இடத்தைப் பட்டியலிட்டார்.*சிறப்பு விருந்தினர்கள்:* பெங்களூரு டொயோட்டா கிர்லோஸ்கர் நிறுவன முன்னாள் துணைத் தலைவர் சேகர் விஸ்வநாதன், ரேடிக்கல் கட்டிடக்கலை நிறுவன நிறுவனர் ரூஹி சுல்தானா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிடம் பிடித்த மாணவமாணவியருக்குப் பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கினர்.சோனா கல்வி நிறுவன இயக்குனர் வீ. கார்த்திகேயன், முதல்வர்கள் கனகராஜ், காதர்நவாஷ், கவிதா மற்றும் பேராசிரியர்கள், மாணவ மாணவியர் திரளாகக் கலந்து கொண்டனர். மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறைத்தலைவர் முனைவர் பத்மா நன்றியுரை ஆற்றினார்.




■ தென்காசி குத்துக்கல்வலசை ரவுண்டானா பகுதியில் நடைபெறவுள்ள சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு மாவட்ட நிர்வாகம் மற்றும் மகளிர் திட்டம் சார்பில் 100% வாக்குப்பதிவை வலியுறுத்தி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப. தென்காசி மாவட்டத்திற்கான தேர்தல் லோகோவை காட்சிப்படுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்



■ 100% வாக்கினை வலியுறுத்தி தேர்தல் துறை மூலம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருவதின் தொடர் நிகழ்வாக, மூன்றாம் பாலினத்தவர்களுடன், புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கருத்தரங்கு கூடத்தில், எதிர்வரும் புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்காளர் விழிப்புணர்வு பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, மூன்றாம் பாலின சமூகத்தினருடன் சந்திப்பு நிகழ்வு நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேசிய மாவட்ட தேர்தல் அதிகாரி குலோத்துங்கன், தாங்கள் அனைவரும் தவறாமல் வாக்களித்து ஜனநாயக கடமையாற்ற வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.






















SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000